**Starting time 11.49 A.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.472/2006**

Deposition of **<u>P.W.2</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 13.09.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : வீரம்மாள் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>2. 1, 2</u>** <u>மற்றும்</u> **<u>4</u>** <u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u> எனக்கு சொந்தமாக விவசாய நிலம் மொத்தம் எவ்வளவு உள்ளது என்றால், 15 ஏக்கர். எனக்கு சொந்தமாக எத்தனை வீடுகள் உள்ளது என்றால், 3 வீடுகள். என்னென்ன வீடுகள் என்றால், மெத்தை வீடு, வில்லை வீடு மற்றும் ஒரு காலிமனை உள்ளது. என்னுடைய சொத்துக்கள் சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால், எனது கணவரை கேட்டால்தான் தெரியும். என்னுடைய வழக்கில் சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் ஒப்படைக்கவில்லை என்றால், எனது கணவருக்குத்தான் தெரியும். என்னுடைய சொத்துக்கள் சம்பந்தமான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யாததால் இவ்வழக்கே நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால், ஒப்படைத்திருப்பார்கள். பாகப்பிரிவினை ஒப்பந்த முச்சலிக்க என்ற ஆவணம் தம்மம்படி காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டதா என்றால், ஆமாம். தம்மம்பட்டி காவல் நிலையத்தில் வைத்து பஞ்சாயத்து பேசினோமா என்றால், ஆமாம். தாவா

சொத்துக்கள் குறித்து எந்த விவரமும் தெரியாது என்றாலும், என் கணவரின் துண்டுதலின் பேரில்தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும், சரியல்ல.

1, 2 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 11.57 A.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.